**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தண்டராம்பட்டு**
**முன்னிலை : திருமதி. G. அமிர்தம் B.Sc., LL.B.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தண்டராம்பட்டு**
**2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 21 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.154/2023</u>**
**<u>CNR No. TNTM1E0007592023</u>**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர், தண்டராம்பட்டு காவல் நிலையக் குற்ற எண்.226/2023 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | மகபூப்பாஷா த/பெ. ஷேக்குடு<br>நெ.877/4 மாரியம்மன் கோவில் தெரு,<br>தண்டராம்பட்டு கிராமம் மற்றும் வட்டம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| குற்றம் சாட்டப்பட்டது | : | எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 353, 332, 506(2)ன் கீழும், |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 353, 332, 506(2)ன் கீழும், |
| குற்றம் நிகழ்ந்த நாள் | : | 19.07.2023 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 20.07.2023 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | : | எதிரி 21.07.2023 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு 5 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்து 25.07.2023 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். |
| எதிரிகள் பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | எதிரி 21.07.2023 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு 5 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்து 25.07.2023 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். |
| குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 21.08.2023 |
| குவிமுச பிரிவு 240 ன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேட்கப்பட்ட நாள் | : | 07.10.2023 |
| சாட்சிகள் விசாரணை தொடங்கிய நாள் | : | 19.06.2024 |
| சாட்சிகள் விசாரணை | : | 19.06.2024 |

<table>
<tr><td>முடிவடைந்த நாள்</td><td></td><td></td></tr>
<tr><td>குவிமுச பிரிவு 311ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம்</td><td>:</td><td>தாக்கல் இல்லை</td></tr>
<tr><td>முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள்</td><td>:</td><td>
<table>
<tr><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>19.06.2024</td><td>19.06.2024</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>19.06.2024</td><td>19.06.2024</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>19.06.2024</td><td>19.06.2024</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>19.06.2024</td><td>19.06.2024</td></tr>
</table>
</td></tr>
<tr><td>குவிமுச பிரிவு 313(1) (பி)ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>:</td><td>20.06.2024</td></tr>
<tr><td>தலைமறைவு எதிரி குறித்த விபரம்</td><td>:</td><td>இல்லை</td></tr>
<tr><td>நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம்</td><td>:</td><td>இல்லை</td></tr>
<tr><td>தண்டிக்கப்பட்டது</td><td>:</td><td>இல்லை</td></tr>
<tr><td>தீர்மானம்</td><td>:</td><td>குற்றவாளி அல்லர்</td></tr>
<tr><td>முடிவு</td><td>:</td><td>எதிரியை குற்றவாளி அல்லர் என்று குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் தீர்மானித்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.</td></tr>
</table>

கடந்த **21.08.2023**ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.**154/2023** ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி பொது வழக்கறிஞர் நிலை **2** தண்டராம்பட்டு அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு **A.** முரளி அவர்கள் ஆஜராகியும், இறுதியாக இவ்வழக்கு கடந்த **20.06.2024**ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வரப்பெற்றும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது தண்டராம்பட்டு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 353, 332, 506(2)ன் கீழ் குற்ற எண்.226/2023 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதியறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**1. அரசு தரப்பு வழக்கு யாதெனில்,** கடந்த **19.06.2023** ம் தேதியன்று சாட்சி **1** கீழ்வணக்கம்பாடி ரோட்டிலுள்ள அரசு மதுப்பானக்கடையில் பணியிலிருந்தபோது, எதிரி மகபூப்பாஷா என்பவர் பணம் ரூ.**200** கொடுத்து ஆப் பிராந்தி மதுபான பாட்டில் கேட்டதாகவும், அதன் வைிலை ரூ.**320/–** என்று சொல்லி கொடுக்க மறுத்துவிட்டதாகவும், பின்னர் எதிரி சாட்சி **2** னிடம் பாணம் ரூ.**320/–** கொடுத்து மதுபான பாட்டில் வாங்கிக்கொண்டு எனக்கு மதுபான பாட்டில் கொடுக்காத சீமான் தேவிடியா பையன் என்று அசிங்கமாக பேசியும், அதை கேட்ட சாட்சி **1** ஐ கையில் வைத்திருநத இருசக்கர வாகன சாவியால் தலையில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்துச் சென்றுள்ளார். எனவே எதிரி மீது இதச பிரிவுகள் **294**(பி), **353, 332, 506(2)**ன் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளார் என்று கூறி வானாபுரம் காவல் உதவி ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதின் பேரில், ஆவணங்களை பரிசீலனை செய்த இந்நீதிமன்றம் வழக்கினை மேற்படி எண்ணில் கோப்புக்கு எடுத்து எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

**2. எதிரிக்கு வழக்காவணங்கள் வழங்கி, குற்றங்கள் குறித்து வினவிய விவரம் :**

இவ்வழக்கில் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பியதன் பேரில், எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும், குவிமுச பிரிவு **207** ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய கால அவகாசம் அளித்து, இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்த வகையில், எதிரி இவ்வழக்கின் படியான குற்றத்தை புரிந்துள்ளார் என்பதை அனுமானிக்க போதிய அடிப்படை ஆதாரங்கள் இருந்ததால், எதிரி மீது இதச பிரிவுகள் **294**(பி), **353, 332, 506(2)**ன் குற்றச்சாட்டு வனைந்து, எதிரியிடம்

குற்றம் குறித்து வினவியபோது, தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து, தான் குற்றமற்றவர் என்று கூறியதால், அரசு தரப்பின் சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, அரசு தரப்பில் அ.சா.**1** முதல் அ.சா.**4** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் தரப்பில் அ.சா.ஆ.**1** முதல் அ.சா.ஆ.**6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

## 3. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விபரம்

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் தெரிய வருவது யாதெனில்,

**(3.1)** கடந்த **19.06.2023** ம் தேதியன்று சாட்சி **1** கீழ்வணக்கம்பாடி ரோட்டிலுள்ள அரசு மதுப்பானக்கடையில் பணியிலிருந்தபோது, எதிரி மகபூப்பாஷா என்பவர் பணம் ரூ.**200** கொடுத்து ஆப் பிராந்தி மதுபான பாட்டில் கேட்டதாகவும், அதன் விலை ரூ.**320/–** என்று சொல்லி கொடுக்க மறுத்துவிட்டதாகவும், பின்னர் எதிரி சாட்சி **2** னிடம் பாணம் ரூ.**320/–** கொடுத்து மதுபான பாட்டில் வாங்கிக்கொண்டு எனக்கு மதுபான பாட்டில் கொடுக்காத சீமான் தேவிடியா பையன் என்று அசிங்கமாக பேசியும், அதை கேட்ட சாட்சி **1** ஐ கையில் வைத்திருநத இருசக்கர வாகன சாவியால் தலையில் குத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளதாக அரசுத்தரப்பில் சாட்சியம் முன்வைக்கப்பட்டுள்ளது.

**(3.2)** பின்னர் காயமடைந்த அ.சா.1 தண்டராம்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்துள்ளார். கடந்த 14.11.2021 ம் தேதியன்று தண்டராம்பட்டு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் ஏழுமலை அவர்கள் பணியிலிருந்தபோது, அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனு அ.த.சா.ஆ.**1** ஐ பெற்றும், அன்றைய தினமே தண்டராம்பட்டு காவல் நிலைய குற்ற எண்.226/2023 ஆக இதச பிரிவுகள் 294(பி), 353, 332, 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.**3** பதிவு செய்தார்.

**(3.3)** பின்னர் காவல் உதவி ஆய்வாளர் அன்றைய தினமே சம்பவயிடம் சென்று சாட்சிகள் பழனி சதீஷ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.த.சா.ஆ.**4** மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.**5** தயார் செய்தும்,

பார்வை மகசரில் அ.சா.3 னிடம் அ.த.சா.ஆ.**2** பெற்றும், பின்னர் வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையானவர்களை விசாரணை செய்ததில், வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்ததால், எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்ததாகவும், பின்னர் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சையளித்த அரசு மருத்துவர் பிருந்தா அவர்களை விசாரணை செய்து, விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.த.சா.ஆ.**6** பெற்றும், இறுதியாக காவல் உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிக்கெதிராக இதச பிரிவுகள் **294(பி), 353, 332, 506(2)**ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

**4.** இவ்வழக்கில் அ.சா.**1** முதல் அ.சா.**3** வரையானவர்கள், சாட்சிய விசாரணையின்போது, அரசு தரப்பு சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் மாறுபட்டு சாட்சியம் அளித்துள்ளதால், மேற்கொண்டு சாட்சிகளின் விசாரணை தேவையில்லை என்று மேற்குறிப்பு செய்து, கூடுதல் சாட்சியாக காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் ஏழுமலை அவர்கள் அ.சா.**4** ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**5. எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவுதல் .**

அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா. **1** முதல் அ.சா.**4** உடன் முடித்துக்கொள்ளப்பட்டு அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான பகுதிகள் குறித்து கு.வி.மு.ச பிரிவு **313(1) (ஆ)**–ன் கீழ் வினவியபோது, எதிரி பொய் வழக்கு, பொய் சாட்சியம் என மறுத்து தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லையென கூறி எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, இரு தரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது.

**6.** அரசு தரப்பில் **1** முதல் **3** எதிரிகள் மீது இதச பிரிவுகள் **294(பி), 353, 332, 506(2)**ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதா **?** ஆம் எனில் எதிரிக்கு வழங்கப்பட இருக்கும் தண்டனை எவ்வளவு என்பதேயாகும்.

**7.** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**8. எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா ? என்பது இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாக காணப்படுகிறது.**

**(8.1)** இந்த வழக்கில் புகார்தாரர் **அ.சா.1 ன்** சாட்சியத்தில், சுமார் **6** மாதங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு **7.30** மணிக்கு மதுபானக்கடையில், விற்பனையாளராக பணியிலிருந்தபோது, மதுபானம் வாங்க கூட்டமாக வந்த நபர்கள் ரூ.**200** கொடுத்து **1/2** பாட்டில் மதுபானம் கொடு என்று கேட்டதாகவும், தான் அவர்களிடம் ஒரு பாட்டிலின் விலை **320** என்பதால், கொடுக்க மறுத்துவிட்டதாகவும், மற்றொரு விற்பனையாளர் ஏழுமலை என்பவரிடம் ரூ.**320** கொடுத்து சரக்கு வாங்கிகொண்டு தான் தர மறுத்தால், தன்னை ஆபாசமான வார்த்தையால் திட்டி வெளியேவந்தால் வண்டி விட்டு ஏற்றி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதாகவும், ஏன் இவ்வாறு திட்டகிறீர்கள் என்று கேட்டதற்கு கூட்டத்தில் வந்தவர்களில் ஒருவரின் கையில் வைத்திருந்த வண்டி சாவியால் குத்தி தலையில் பலத்த காயம் ஏற்படுத்தியதாகவும், கூட்டமாக ஆட்கள் இருந்ததால், யார் தன்னை தள்ளினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், பின்னர் சிகிச்சைக்கு தண்டராம்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளநிலையில், அரசு தரப்பில் அ.சா.**1** ஐ குறுக்கு விசாரணை செய்தபோது, அடையாளம் தெரியாத நபர் தன்னை தாக்கியதாகவும், எதிரி தன்னை ஆபாசமாக திட்டவில்லை என்றும், எதிரிக்கும் தனக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வருவதாகவும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(8.2)** அ.சா.**1** ஐ பிறழ் சாட்சியாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்துள்ளபோதும், அரசு தரப்பின் காயம்பட்ட சாட்சியான அ.சா.**1** ன் மூலம் வழக்கு விவரம் எதுவும், சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு வெளிக்கொண்டுவரப்படவில்லை. அ.சா.**2** ம் தனது சாட்சியத்தில் சுமார் **1** வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மதுபானக்கடையில் விற்பனையாளராக

இருந்தபோது, மதுபானம் வாங்க கூட்டமாக வந்த நபர்கள் அ.சா.**1**னிடம் ரூ.**200** கொடுத்து **1/2** பாட்டில் மதுபானம் கொடு என்று கேட்டதாகவும், விலை **320** என்பதால் கொடுக்க மறுத்துவிட்டதாகவும், மற்றொரு விற்பனையாளர் ஏழுமலை என்பவரிடம் **320** கொடுத்து சரக்கு வாங்கி கொண்டு சரக்கு கொடுக்க மறுத்த அ.சா.**1** ஐ ஆபாசமான வார்த்தையால் திட்டி வெளியே வந்தால் வந்தால் வண்டி விட்டு ஏற்றி கொலை செய்துவிடுவேன் என்று மிரட்டியதாகவும், ஏன் இவ்வாறு திட்டகிறீர்கள் என்று கேட்டதற்கு கூட்டத்தில் வந்தவர்களில் ஒருவரின் கையில் வைத்திருந்த வண்டி சாவியால் குத்தி தலையில் பலத்த காயம் ஏற்படுத்தியதாகவும், கூட்டமாக ஆட்கள் இருந்ததால் யார் தன்னை தள்ளினார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், பின்னர் சிகிச்சைக்கு தண்டராம்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளநிலையில், அரசு தரப்பில் அ.சா.**2** ஐ குறுக்கு விசாரணை செய்தபோது, அடையாளம் தெரியாத நபர் தன்னை தாக்கியதாகவும், எதிரி தன்னை ஆபாசமாக திட்டவில்லை என்றும், எதிரிக்கும் தனக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வருவதாகவும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்று சாட்சியம் அளித்துள்ளார்.

**(8.3)** சம்பவ இடத்தை உறுதிப்படுத்தும் விதமாக விசாரிக்கப்பட்ட அ.சா.**3** தனது சாட்சியத்தில், தற்போது தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள **2** வது கையெழுத்து தன்னுடையதுதான் என்றும், மேற்படி கையெழுத்தை ஒரு வருடத்திற்கு முன்பு ஒருநாள் தண்டராம்பட்டு மதுபானக்கடையில் இருந்தபோது, தண்டராம்பட்டு போலீசார் சண்டை நடந்தது சம்மந்தமாக விசாரித்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அதில் தன்னை சாட்சியாக இருக்க சொல்லி கையெழுத்து கேட்டதால் போட்டு கொடுத்ததாகவும், தன்னுடன் செல்வம் என்பரும் கையெழுத்து செய்ததாகவும், சம்பவம் குறித்து போலீசார் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.**3** ன் சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது, சம்பவயிடத்தை தண்டராம்பட்டு போலீசார் சென்று பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்று அரசு

தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**(8.4)** இவ்வழக்கின் காயம்பட்ட சாட்சிகளான பிரதான சாட்சிகள் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளநிலையில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி பெற்று குறுக்கு விசாரணை செய்தபோது, எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல என அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையானவர்கள் கூறியுள்ளதையும், எஞ்சியுள்ள சாட்சியான அ.சா.4 புலன் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளரின் சாட்சியம் மட்டுமே உள்ளது. அ.சா.4 ன் மூலம் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.3** ஆகவும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.4** மற்றும் **அ.த.சா.ஆ.5** ஆகவும், பார்வை மகசரிலுள்ள அ.சா.3 ன் கையொப்பம் **அ.த.சா.ஆ.2** ஆகவும், அ.சா.1 ன் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று **அ.தசா.ஆ.6** ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளநிலையில் அரசு தரப்பு சாட்சியான அ.சா.4 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து இவ்வழக்கினை தீர்வு காண இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**(8.5)** மேலும், முக்கிய சாட்சிகள் சமாதானத்தின் அடிப்படையில் வழக்கை மேல் நடத்த விரும்பாத பட்சத்தில், குற்ற வழக்கை மேல் நடத்துவது சட்டத்திற்கு புறம்பான ஒரு செயல் என மாண்புமிகு உச்ச நீதிமன்றம் **Madhan Mohan Abbot vs State of Punjab 2008(3) Crl 212 Sc** மற்றும் **Dr. Arvind Barsaul Etc Vs State Madhya pradesh and Anothers 2008 (3) Crl 1517 SC** என்ற தீர்ப்புரைகளில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள மாண்புமிகு உச்சநீதிமன்ற தீர்ப்பு இவ்வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.

**9.** இறுதியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிய சான்றாவணங்களை கவனமுடன் பரிசீலனை செய்ததில், எதிரி மீது இதச பிரிவுகள் **294(பி), 353, 332, 506(2)** ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த

சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கத் தவறிவிட்டப்படியால், எதிரியை குற்றவாளி இல்லையென்று தீர்மானித்து கு.வி.மு.ச பிரிவு **248(1)**ன் கீழ் எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. வழக்கு சொத்து இல்லை

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்து, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று **21.06.2024** ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

AMIRDHAM Digitally signed by AMIRDHAM Date: 2024.06.21 18:22:45 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தண்டராம்பட்டு.

**அரசு தரப்பு சாட்சிகள்:**

அ.சா.**1** – சீமான் சின்னதுரை (புகார்தாரர்)

அ.சா.**2** – கர்ணன்

அ.சா.**3** – பழனி

அ.சா.**4** – ஏழுமலை ( உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

அ.த.சா.ஆ.**1** – புகார் வாக்குமூலம்

அ.த.சா.ஆ.**2**– பார்வை மகசரிலுள்ள அ.சா.**3** ன் கையொப்பம்

அ.த.சா.ஆ.**3**– முதல் தகவல் அறிக்கை

அ.த.சா.ஆ.**4**– பார்வை மகசர்

அ.த.சா.ஆ.**5**– மாதிரி வரைபடம்

அ.த.சா.ஆ.**6**– விபத்து பதிவேட்டுடன் கூடிய அ.சா.**1** ன் காயச்சான்று

**அரசு தரப்பு சான்று பொருட்கள் :** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் :** இல்லை

**எதிரி தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

**எதிரி தரப்பு சான்றுபொருட்கள் :** இல்லை

AMIRDHAM Digitally signed by AMIRDHAM Date: 2024.06.21 18:22:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தண்டராம்பட்டு.

**பின் குறிப்பு:**

**1.** வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்தார்.
**2.** வழக்கின் முடிவு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
**3.** வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் மூன்று நாட்களுக்கு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.
**4.** எதிரி கு.வி.மு.ச பிரிவு **248(1) –**ன் கீழ் விடுதலை செய்யப்பட்டார்கள்.